குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.21/2015

அ.சா.1

2025–ம் ஆண்டு ஜுலை 21–ம் தேதி திங்கள்கிழைமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | குழந்தை கவுண்டர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.50 மணி,

Accused A1.Murugan, A2.Sibichakravarthi Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. Advocate Mr.Sivasankar present for Advocate Mr.Veeramani both accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 25.04.2013 ஆம் தேதி நான் ஓமலூர் நெடுஞ்சாலை காவல் ரோந்து பிரிவில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, மாலை 06.30 மணியளவில், சேலம் – தருமபுரி சாலையில், காமலாபுரம் ஏர்போர்ட் பிரிவில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, நீல நிற பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் இருவரை நிறுத்தி சோதனை செய்தபோது, அவர்களிடம் நாட்டு துப்பாக்கி ஒன்றும், வேட்டைக்கு பயன்படுத்தப்படும் டார்ச் லைட் ஒன்றுட், கரி மருந்து மற்றும் பால்ரச குண்டுகளும் வைத்திருந்தார்கள்.

2. அவர்களிடம் விசாரித்தபோது டேனிஷ்பேட்டைக்கு முயல் வேட்டைக்கு செல்வதாக சொன்னார்கள். அவர்கள் வைத்திருந்த நாட்டு துப்பாக்கிக்கு உரிமம் இல்லையென்று சொன்னார்கள். நான் அந்த இருவரையும் விசாரிக்க, 1.அழகாபுரத்தை சேர்ந்த முருகன், 2.சிபிசக்ரவர்த்தி என தெரியவந்தது. பின்பு, அவர்களை ஓமலூர் காவல் நிலையத்திற்று அழைத்து வந்து, நாட்டு துப்பாக்கி, டார்ச் லைட், கரிமருந்து மற்றும் பால்ரச குண்டுகள் மற்றும் அவர்கள் ஓட்டி வந்த இருசக்கர வாகனம்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.21 17:43:59 +0530

ஆகியவற்றுடன் காவல் நிலைய ஆய்வாளரிடம் ஒப்படைத்து, புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

**சாட்சி வழக்கு சொத்துக்களை அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.04 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.21 17:44:02 +0530